**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, அரியலூர்**
**முன்னிலை: திருமதி. இரா. சங்கீதா சேகர், பி.ஏ.பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.I, அரியலூர்.**

**2026–ம் ஆண்டு ஜூன் 06– ஆம் நாள் சனிக் கிழமை**

**C.C.No.695/2025**
**CNR No.TNAL040050942025**

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
அரியலூர் காவல்நிலையம்,
கு.எண்.80/2025. ... குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

ரெங்கசாமி, 47/26
த/பெ.ராமசாமி
வடக்கு தெரு,
வெளிப்பிரிங்கியம்,
புதுப்பாளையம் அஞ்சல்,
அரியலூர் மாவட்டம். ... எதிரி.

**குற்றம்** : எதிரி மீது பிரிவு 4(1) (A) TNP (Amendment) Act 2024.

**குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டது** : எதிரி மீது பிரிவு 4(1) (A) TNP (Amendment) Act 2024.

**தீர்ப்பு** : முடிவாக எதிரி மீதான பிரிவு 4(1) (A) TNP (Amendment) Act 2024 –ன் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி எழுதி கொடுத்த பிணை முறி ஆவணம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகவேண்டியுள்ளது. ஆர்.பி.எண். 146/2025ல் ஒப்படைக்கப்பட்ட வழக்குச் சொத்தான 1) Cash Rs.150/–ஐ மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு அரசுக்கு ஆதாயமாக்கவும், 2) வெள்ளை நிற சாக்குபை –1 மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 12:58:12 +0530

| வ. எண் | குற்றம்சாட்டப்பட்டவர் பற்றிய விளக்கம் | | | | |
|---|---|---|---|---|---|
| | பெயர் | தந்தை/ கணவரின் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | ரெங்கசாமி | த/பெ.ராமசாமி | நடத்துனர் | வடக்கு தெரு, வெளிப்பிரிங்கியம், புதுப்பாளையம் அஞ்சல், அரியலூர் மாவட்டம். | 47 |

| தேதி | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| நிகழ்வு | புகார் | கைது (அ) சரணடை-ந்தது | ஜாமீன் விடுப்பு | சாட்சிகளின் விசாரணை செய்ய ஆரம்பித்த தேதி | சாட்சிகளின் விசாரணை செய்ய முடித்த தேதி | தண்டணை (அ) ஆணை | தாமதத்திற்கு விளக்கம் |
| 02.03.2025 | 02.03.2025 | 02.03.2025 | 05.03.2025 | 03.06.2026 | 03.06.2026 | 06.06.2026 | - |

| வரிசை எண். | விளக்கம் | விவரம் | |
|---|---|---|---|
| 1. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் காவலில் வைக்கப்பட்ட காலம் | குற்றவாளி காவலில் வைக்கப்பட்ட தேதி | விடுவிக்கப்பட்ட விவரம் |
| | | 02.03.2025 | எதிரி இந்நீதிமன்ற Crl.M.P.No.236/2025, dt.05.03.2025 உத்தரவின் படி பிணையில் சென்றுள்ளார். |
| 2. | நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்த தேதி. | 12.12.2025 | |

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 12:58:20 +0530

<table>
<tr><td>3.</td><td>அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கின் சமர்ப்பிக்கும் தேதி</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>4.</td><td>பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டத்தின் பிரிவு 263 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரை விசாரிக்கும் தேதி</td><td colspan="3">U/s.263 of BNSS on 12.02.2026</td></tr>
<tr><td>5.</td><td>அனைத்து இதர மனுக்களையும் தாக்கல் செய்தல். BNSS இன் 355 போன்ற வழக்கமான மனுக்கள் தவிர, மேல் நீதிமன்றங்களில் உள்ள சவாலின் முடிவுகள் உட்பட அவற்றின் முடிவுகள்</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td rowspan="3">6.</td><td rowspan="3">முதல் விசாரணை மற்றும் சாட்சிகளின் குறுக்கு விசாரணை தேதி</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>03.06.2026</td><td>03.06.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>03.06.2026</td><td>03.06.2026</td></tr>
<tr><td>7.</td><td>குற்றம் சாட்டப்பட்ட U/s இன் பரிசோதனை தேதி. 351(1)(b) BNSS</td><td colspan="3">05.06.2026</td></tr>
<tr><td rowspan="2">8.</td><td rowspan="2">இந்த தோற்றம் / தயாரிப்பில் தலைமறைவு விவரங்கள், சந்தர்ப்பம் இருக்கலாம்.</td><td colspan="2">ஜாமீனில் வெளிவர முடியாத வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது</td><td>ரத்து செய்யப்பட்ட தேதி</td></tr>
<tr><td colspan="2">---</td><td>---</td></tr>
<tr><td>9.</td><td>அவர்களின் முடிவுகளுக்கு மேல் நீதிமன்றங்களால் பெரும் தடை</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>

இவ்வழக்கானது 15.12.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 06.06.2026–ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்ததில், அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர், நிலை 2, அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சக்திவேல்,B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 12:58:27 +0530

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது பிரிவு 193 BNSS –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை கீழ் தாக்கல் செய்த வழக்காகும்.

2. <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் –</u>

கடந்த 02.03.2025 ந் தேதி காலை 6.00 மணிக்கு அரியலூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் P.பூமிவேல் என்பவர் மது குற்றங்களை தடுக்கும் பொருட்டு நிலைய தலைமை காவலர் 281 திரு.நித்தியானந்தம், காவலர் 1140 திரு.ஆனந்தராஜ் ஆகியோருடன் சென்று வெளிப்பிரிங்கியம் கிராமத்தில் 6.30 மணிக்கு கண்காணித்த போது இவ்வழக்கின் எதிரி ரெங்கசாமி தப்பி ஓட முற்பட்ட போது பார்ட்டி சகிதம் வளைத்து பிடித்து விசாரித்ததில் முன்னுக்கு பின் முரணாக சொன்னவர் இறுதியில் ஒரு சாக்குபையில் அரசு மதுபானங்களான 180ML அளவு கொண்ட Black Peral பிராந்தி 07 பாட்டில்களை எந்தவித அரசு அனுமதியின்றியும் சட்டவிரோதமாக விற்பனைக்கு வைத்திருந்துள்ளார். எனவே எதிரி மீது பிரிவு 4(1) (A) TNP (Amendment) Act 2024 –ன் படி தண்டிக்கத்தக்கது என்று அரியலூர் காவல் நிலைய ஆய்வாளர் அவர்களால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி குற்ற இறுதியறிக்கையில் எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால், இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி முன்னிலையான பிறகு 22.01.2026–ஆம் தேதி அவருக்கு வழக்காவணங்களின் நகல் பா.ந.சு.ச.பிரிவு. 230–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்பு, 12.02.2026 –ஆம் தேதி பா.ந.சு.ச. பிரிவு 263(1)–ன் படி எதிரி மீது பிரிவு 4(1) (A) TNP (Amendment) Act 2024 –ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, பா.ந.சு.ச. பிரிவு 263(2)ன் கீழ் எதிரிக்கு குற்றச்சாட்டுகளின் சாராம்சங்கள் குறித்து விளக்கி கேள்வி கேட்டபோது, எதிரி தான் குற்றவாளி இல்லை என குற்றத்தை மறுத்து சாட்சி விசாரணை வேண்டினார். எனவே, வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1, அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 12:59:18 +0530

சான்றுபொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், எதிரி தரப்பில் எவ்வித சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம்</u>

இவ்வழக்கின் அ.சா.1, அ.சா.2 அரசு தரப்பு சாட்சிகள் சம்பவம் குறித்து காவல் உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் சம்பவ இடம் சென்று, எதிரியிடமிருந்த சாக்கு பையை ஆய்வு செய்தபோது மது பாட்டில்கள் மற்றும் அவரது சட்டை பையில் பணம் இருந்ததாகவும், பொதுமக்கள் யாரும் இல்லாததால் அ.சா.1 முன்னிலையில் காவல் உதவி ஆய்வாளர் அந்த பாட்டில்களை கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசரில் கையொப்பம் செய்தது பற்றியும், காவல்நிலையம் வந்து ஆய்வாளர் எதிரி மீது வழக்குபதிவு செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.1 மூலமாக ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகவும், அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.2 பூமிவேல், உதவி ஆய்வாளர், எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும், மதுபாட்டில்கள், பணம் ஆகியவற்றை கைப்பற்றியது பற்றியும், பாட்டில்களில் உள்ள மதுவை சாட்சிகள் முன்னிலையில் கெட்டி அழித்துவிட்டது பற்றியும், வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தது பற்றியும், வழக்கு பதிவு செய்தது பற்றியும், எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 மூலமாக ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், அழிப்பு மகசர் அ.சா.ஆ.7 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.8 ஆகவும், பணம் ரூ.150/– அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டபின் 05.06.2026–ஆம் தேதி எதிரிக்கு பாதகமாக தோன்றும் அரசு தரப்பு சாட்சியம் குறித்து அவற்றை கேள்விகளாக தொகுத்து எதிரிக்கு எடுத்துக்கூறி பா.ந.சு.ச. பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்று கூறினார். எதிரி தரப்பில்

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 12:59:32 +0530

விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று தெரிவித்தார். பின்னிட்டு சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. இருதரப்பு சாட்சிகள், விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

7. <u>அரசு தரப்பு வழக்கறிஞர் வாதுரை</u>

அரசு தரப்பில், கடந்த 02.03.2025 ந் தேதி காலை 6.00 மணிக்கு அரியலூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் P.பூமிவேல் என்பவர் மது குற்றங்களை தடுக்கும் பொருட்டு நிலைய தலைமை காவலர் 281 திரு.நித்தியானந்தம், காவலர் 1140 திரு.ஆனந்தராஜ் ஆகியோருடன் சென்று வெளிப்பிரிங்கியம் கிராமத்தில் 6.30 மணிக்கு கண்காணித்த போது இவ்வழக்கின் எதிரி ரெங்கசாமி தப்பி ஓட முற்பட்ட போது பார்ட்டி சகிதம் வளைத்து பிடித்து விசாரித்ததில் முன்னுக்கு பின் முரணாக சொன்னவர் இறுதியில் ஒரு சாக்குபையில் அரசு மதுபானங்களான 180ML அளவு கொண்ட Black Peral பிராந்தி 07 பாட்டில்களை எந்தவித அரசு அனுமதியின்றியும் சட்டவிரோதமாக விற்பனைக்கு வைத்திருந்துள்ளார். அதை அ.சா.1, அ.சா.2 வரை உள்ள சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 சான்றுபொருள் ஆகியவை மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிரி தண்டிக்கப்படவேண்டும் என்று அரசு தரப்பு வழக்கறிஞரால் வாதிடப்பட்டது.

8. <u>எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதுரை:-</u>

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. சம்பவம் நடைபெற்ற நாள் 02.03.2025 அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கை காலதாமதமாக 12.12.2025 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும், எதிரியின் குற்றச் செய்கை குறித்து பொதுமக்களோ அல்லது தனி நபரோ சாட்சியம் அளிக்கவில்லை என்றும், சம்பவ இடத்தில் எதிரியை கைது செய்த போது தனி நபர்கள், பொதுமக்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சிகள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். எதிரி மது பாட்டில்களை விற்பனை செய்ததாக கூறி பொதுமக்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றும், தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றாமல்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 12:59:39 +0530

போலீசாரை சாட்சிகளாக சேர்த்து கைப்பற்றியதாக பொய்யாக புள்ளி விவர கணக்கிற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சம்பவ இடத்தில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், போலீஸ் அதிகாரிகளை தவிர பொது மக்கள் யாரையும் கண்ணுற்ற சாட்சிகளாகவோ, மகசர் சாட்சிகளாகவோ விசாரிக்கவில்லை. தனிப்பட்ட நபர்கள் யாரும் இது சம்மந்தமாக புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று வாதிடப்பட்டது.

**தீர்வு**

09. இவ்வழக்கில், கடந்த 02.03.2025 ந் தேதி காலை 6.00 மணிக்கு அரியலூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் P.பூமிவேல் என்பவர் மது குற்றங்களை தடுக்கும் பொருட்டு நிலைய தலைமை காவலர் 281 திரு.நித்தியானந்தம், காவலர் 1140 திரு.ஆனந்தராஜ் ஆகியோருடன் சென்று வெளிப்பிரிங்கியம் கிராமத்தில் 6.30 மணிக்கு கண்காணித்த போது இவ்வழக்கின் எதிரி ரெங்கசாமி தப்பி ஓட முற்பட்ட போது பார்ட்டி சகிதம் வளைத்து பிடித்து விசாரித்ததில் முன்னுக்கு பின் முரணாக சொன்னவர் இறுதியில் ஒரு சாக்குபையில் அரசு மதுபானங்களான 180ML அளவு கொண்ட Black Peral பிராந்தி 07 பாட்டில்களை எந்தவித அரசு அனுமதியின்றியும் சட்டவிரோதமாக விற்பனைக்கு வைத்திருந்துள்ளார். மேற்படி, எதிரி மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

10. இந்த வழக்கில் அ.சா.1 ஆனந்தராஜ் தனது நீதிமன்ற முதல் விசாரணையில், கடந்த 02.03.2025 அன்று அரியலூர் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்தபோது காலை 08.00 மணிக்கு உதவி ஆய்வாளர் பூமிவேல் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நான், தலைமை காவலர் 281 நித்தியானந்தம் மற்றும் உதவி ஆய்வாளர் பூமிவேல் ஆகிய மூவரும் வெளிப்பிரிங்கியம் கிராமத்தில் உள்ள ரெங்கசாமி என்பவர் வீட்டின் அருகே

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 12:59:45 +0530

சென்றபோது அங்கு நின்றுகொண்டிருந்த ரெங்கசாமி எங்களை கண்டவுடன் தப்பி ஓட முயற்சி செய்தார் என்றும், அவரை வளைத்து பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் ரெங்கசாமி, த/பெ. ராமசாமி, வெளிப்பிரிங்கியம் என்று கூறினார் என்றும், அவர் தான் சட்டவிரோதமாக மது பாட்டில்களை விற்பனை செய்வதை ஒப்புக்கொண்டு அவர் வீட்டின் பின்புறத்தில் இருந்த ஒரு சாக்கு பையை அடையாளம் காட்டி ஆஜர் செய்தார் என்றும், அந்த சாக்கு பையை திறந்து பார்த்தபோது Black Pearl பிராந்தி –7 பாட்டில்கள் இருந்தது என்றும், அவரை உதவி ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்து திரேக சோதனை செய்தபோது அவர் சட்டை பாக்கெட்டில் ரூ.150/– பணம் இருந்தது. அதை பற்றி விசாரித்தபோது பிராந்தி பாட்டில்கள் விற்பனை செய்த வகையில் கிடைத்த பணம் என்று கூறினார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் என்னை விசாரிக்கும் போது தான் உதவி ஆய்வாளர் என்னிடம் கையொப்பங்கள் கேட்டார் நான் அந்த கையொப்பங்களை போட்டேன் என்றால் சரிதான் என்றும், நாங்கள் அங்கு சென்றபோது குடியிருப்பு பகுதிகளை சேர்ந்த சுமார் 25 பேர் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 பூமிவேல் தனது நீதிமன்ற முதல் விசாரணையில் கடந்த 02.03.2025 அன்று அரியலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 08.00 மணிக்கு எனக்கு வெளிப்பிரிங்கியம் கிராமத்தில் ரெங்கசாமி என்பவர் சட்ட விரோதமாக மது பாட்டில்கள் விற்பனை செய்வதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நான், தலைமை காவலர் 281 நித்தியானந்தம், காவலர் 1140 ஆனந்தராஜ் ஆகிய மூவரும் வெளிப்பிரிங்கியம் கிராமத்தில் உள்ள ரெங்கசாமி என்பவர் வீட்டின் அருகே சென்றபோது அங்கு நின்றுகொண்டிருந்த ரெங்கசாமி எங்களை கண்டவுடன் தப்பி ஓட முயற்சி செய்தார் என்றும், அவரை வளைத்து பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் ரெங்கசாமி, த/பெ. ராமசாமி, வெளிப்பிரிங்கியம் என்று கூறினார் என்றும், அவர் தான் சட்டவிரோதமாக மது பாட்டில்களை விற்பனை செய்வதை ஒப்புக்கொண்டார் என்றும், அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அங்கு பொது மக்கள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும், அந்த

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 12:59:54 +0530

ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி " .... பணம் ரூ.150/- ஆகியவற்றை தங்களிடம் ஆஜர் செய்கிறேன் " ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், அவர் வீட்டின் பின்புறத்தில் இருந்த ஒரு சாக்கு பையை அடையாளம் காட்டி ஆஜர் செய்தார் என்றும், அந்த சாக்கு பையை திறந்து பார்த்தபோது Black Pearl பிராந்தி -7 பாட்டில்கள் இருந்தது என்றும், அவரை நான் காரணம் கூறி கைது செய்து திரேக சோதனை செய்தபோது அவர் சட்டை பாக்கெட்டில் ரூ.150/- பணம் இருந்தது என்றும், அதை பற்றி விசாரித்தபோது பிராந்தி பாட்டில்கள் விற்பனை செய்த வகையில் கிடைத்த பணம் என்று கூறினார் என்றும், அந்த பாட்டில்கள் மற்றும் பணத்தை நான் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் காவல் நிலையம் வந்து அரியலூர் காவல் நிலைய குற்ற எண்.80/2025 சட்டபிரிவு 4(1)(A) -ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கை பதிவு செய்தேன் என்றும், அந்த முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் மது பாட்டில்களில் இருந்த மதுவை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அழிப்பு மகசர் மூலமாக கொட்டி அழித்தேன் என்றும், அந்த அழிப்பு மகசர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பணம் ரூ.150/-ஐ படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் என்றும், அந்த படிவம் 91 அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பணம் ரூ.150/- அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்னர் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.2 தனது குறுக்குவிசாரணையில், 2 காவலர்களையும் நான் எந்த இடத்தில் விசாரணை செய்தேன் என்றால் 02.03.2025 அன்று சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன் என்றும், அதன் பிறகு அவர்களை வேறு எங்கும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், எதிரியிடம் எந்த இடத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து வாங்கினேன் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் 8 மது பாட்டில்கள் மற்றும் ரூ.150/- பணத்தை ஆஜர்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 13:00:01 +0530

செய்வதாக கூறியுள்ளார் என்றால் சரிதான் என்றும், ஆனால் கைப்பற்றுதல் மகசரில் 7 மது பாட்டில்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், கைப்பற்றுதல் மகசரில் ரெங்கசாமி வீட்டின் அருகில் எந்த இடத்தில் எந்த திசையில் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான் என்றும், நாங்கள் அங்கு சென்றபோது குடியிருப்பு பகுதிகளை சேர்ந்த சுமார் 25 பேர் இருந்திருப்பார்கள் என்றால் எதிரி மட்டும் தான் அங்கு இருந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.2, தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில், சம்பவ தினத்தன்று நிலைய காவலர்களுடன் வெளிப்பிரிங்கியம் கிராமத்தில் உள்ள ரெங்கசாமி வீட்டின் அருகே கண்காணித்த போது அவர் தங்களை கண்டதும் அங்கிருந்து தப்பியோட முயற்சித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது அவர் சட்டவிரோதமாக மதுபாட்டில்கள் விற்பனை செய்து வந்ததை ஒப்புக்கொண்டு அவரது வீட்டு பின்புறத்தில் இருந்து ஒரு சாக்குபையை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்ததாகவும், அந்த சாக்குபையில் 180ML அளவுள்ள Black Pearl பிராந்தி பாட்டில்கள் 07 மற்றும் அவரது பாக்கெட்டில் ரூபாய் 150/- பணம் இருந்ததாகவும், மேற்படி வழக்கு சொத்துக்களை மகஜரில் கைப்பற்ற பொது மக்கள் யாரும் சாட்சிகளாக முன்வராத காரணத்தால் உடன் இருந்த காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், எதிரி மீது வழக்கு பதிவு செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.2 காவல் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை.

15. இவ்வழக்கில் அ.சா.2 காவல் உதவி ஆய்வாளர் திரு.பூமிவேல் என்பவர் புகார்தாரர் ஆவார். அ.சா.1 காவல்நிலைய முதலநிலை காவலர்கள் நீதிமன்ற முதல் விசாரணையில் அ.சா.2 காவல் உதவி ஆய்வாளரின் சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1, அ.சா.2 தங்களது குறுக்குவிசாரணையில் எதிரி பாட்டிலை யாரிடமாவது கொடுத்ததையோ அல்லது வாங்கியதையோ நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை என்றும், நாங்கள் அங்கு சென்றபோது குடியிருப்பு பகுதிகளை சேர்ந்த சுமார் 25 பேர் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ள நிலையில், சம்பவ இடத்தில் இருந்த 25 நபர்களில் யாரையும்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 13:00:08 +0530

புலன்விசாரணை அதிகாரி சாட்சியாக விசாரணை செய்யவில்லை. மேலும் இவ்வழக்கில் தனிநபர்களையோ, பொதுமக்களையோ அரசு தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1, அ.சா.2 இருவருமே காவல்துறையைச் சேர்ந்த சாட்சிகள் ஆவார்கள். எனவே புலன்விசாரணை அதிகாரி அசா.2 பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. புகார்தாரர் அ.சா.2 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான முதல்நிலை காவலர் அ.சா.1ம் எதிரி மதுபாட்டில்களை கள்ளத்தமாக விற்பனை செய்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் எதிரி பாட்டிலை யாரிடமாவது கொடுத்ததையோ அல்லது வாங்கியதையோ நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை என்றும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் மற்றொரு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியை அரசு தரப்பில் விசாரணை செய்யவில்லை. எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் 8 மதுபாட்டில்கள் மற்றும் ரூ.150/- பணத்தை ஆஜர் செய்வதாக கூறியுள்ளார் என்றால் சரிதான் என்றும், ஆனால் கைப்பற்றுதல் மகசரில் 7 மதுபாட்டில்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், கைப்பற்றுதல் மகசரில் ரெங்கசாமி வீட்டின் அருகில் எந்த இடத்தில் எந்த திசையில் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான் என்றும், அ.சா.3 தன்னுடைய குறுக்குவிசாரணையில் சாட்சியம் அளித்துள்ள நிலையில், புலன்விசாரணை அதிகாரி சம்பவ இடத்தை நிரூபிக்க தவறியதாகவும், கைப்பற்றுதல் மகசர் வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே புலன்விசாரணை அதிகாரி அ.சா.2 ஆல் தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. மேலும் புலன்விசாரணை அதிகாரி அ.சா.2 யாரிடமிருந்து அரசு மதுபான பாட்டில்களை கைப்பற்றினார் என்று அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்படாத

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 13:00:16 +0530

நிலையில், எதிரி அரசு மதுபாட்டில்களை கள்ளத்தனமாக விற்பனை செய்தார் என்பதையும் அரசு தரப்பால் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் வாயிலாக அறிய முடியவில்லை. மேலும் தனிநபர்களோ, பொதுமக்களோ யாரும் எதிரி மதுபாட்டில்களை கள்ளத்தனமாக, அதிக விலைக்கு விற்பனை செய்ததாக புகார் அளிக்கவில்லை. கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் தனிநபர் சாட்சிகள் யாரும் அரசு தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை. சம்பவ இடத்தில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகள் எதனையும் ஆவணங்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எதிரி மதுபாட்டில்களை கள்ளத்தனமாக விற்பனை செய்ததாக அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் எதிரியை யார் அடையாளம் காட்டினார்கள் என்று அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்படவில்லை. முரண்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் அடிப்படையில் எதிரி மீதான குற்றத்தை எதிரிக்கு எதிராக அனுமானம் செய்வது என்பது ஏற்புடையதாக இருக்காது என இந்நீதிமன்றம் கருதுகிறது. அரசு தரப்பானது எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என முடிவு செய்யப்படுகிறது.

18. மேலும், எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகள் குறித்து எழுப்பிய சந்தேகங்களுக்கு அரசு தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. மேற்கூறிய அனைத்து சங்கதிகளினாலும், விவாதத்தின் மூலமும் அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகம் எழுகிறது. எனவே, அரசு தரப்பின் எதிரி மீது வனையப்பட்ட பிரிவுகள் 4(1) (A) TNP (Amendment) Act 2024 –ன் படியான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. அரசு தரப்பு சாட்சிகள் வழியாக உறுதிபடுத்தப்படவில்லை என்பதும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனால் இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிக்கு இவ்வழக்கில் சந்தேகத்தின் பலனை அளிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவதே நீதியின்பால் உகந்தது என்று கருதி சந்தேகங்களின் பலன் எதிரிக்கு அளிக்கப்படுகிறது.

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 13:00:23 +0530

20. முடிவாக எதிரி மீதான பிரிவு 4(1) (A) TNP (Amendment) Act 2024 –ன் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி எழுதி கொடுத்த பிணை முறி ஆவணம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகவேண்டியுள்ளது. ஆர்.பி.எண். 146/2025 ல் ஒப்படைக்கப்பட்ட வழக்குச் சொத்தான 1) Cash Rs.150/–ஐ மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு அரசுக்கு ஆதாயமாக்கவும், 2) வெள்ளை நிற சாக்குபை –1 மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர், 2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 06–ம் நாளான இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 13:00:31 +0530

நீதித்துறை நடுவர் எண்.I,
அரியலூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :–</u>**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.ஆனந்தராஜ், முதல்நிலை காவலர் |
| 2. | அ.சா.2 | திரு.பூமிவேல், காவல் உதவி ஆய்வார் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

| | | |
|---|---|---|
| 1. | அ.த.சா.ஆ.1 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் இரண்டாவது கையொப்பம் |
| 2. | அ.த.சா.ஆ.2 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.1 ன் இரண்டாவது கையொப்பம் |
| 3. | அ.த.சா.ஆ.3 | அழிப்பு மகசரில் உள்ள அ.சா.1 ன் இரண்டாவது கையொப்பம் |
| 4. | அ.த.சா.ஆ.4 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 5. | அ.த.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகசர் |
| 6. | அ.த.சா.ஆ.6 | முதல் தகவல் அறிக்கை |
| 7. | அ.த.சா.ஆ.7 | அழிப்பு மகசர் |
| 8. | அ.த.சா.ஆ.8 | படிவம் 91 |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u>:-**

அ.சா.பொ.1 - பணம் ரூ.150/-

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>**:- இல்லை.

**<u>பின்குறிப்பு</u>** :-

1. இவ்வழக்கின் சாட்சிகள் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் எதிரி விசாரணையின் போது சிறையில் இல்லை.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.06 13:00:41 +0530

நீதித்துறை நடுவர் எண்.I,
அரியலூர்.